**23.06.2026**

**CC 71/2015**

**PW.3. Anbu S/o. Thulukkanam.**

**எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. எதிரியிடம் கடனுறுதி சீட்டை எழுதிகொடுத்துதான் கடன் வாங்கினேன். கடனுறுதி சீட்டில் 100 ருபாய்க்கு 2 ரூபாய் வட்டி என்று எழுதப்பட்டிருந்தது. மேற்படி கடனுறுதி சீட்டின் அடிப்படையில் மாதம் ரூபாய் 500 வட்டி செலுத்தி வந்தேன் எ்னறால் சரிதான். எதிரிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை 2 1/2 வருட காலத்தில் அசல் வட்டியுடன் செலுத்திவிட்டேன்.

2. கணக்கு வழக்கில் பிரச்சனை ஏற்பட்டதால் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் அளித்த அன்றே பேசி பிரச்சனையை தீர்த்து வைத்தார்கள் என்றால் சரிதான். கடனுறுதி சீட்டை என்னிடம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

3. மாதம் ரூ.4000 செலுத்தி வந்ததாக போலிசார் சொல்லிகொடுத்ததன்பேரில் சொன்னேன் என்றால் சரிதான். போலிசார் சொல்லிகொடுத்ததன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.